(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.13/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | | | |
| Name | : | குமார் | Age | : | 58 |
| S/o | : | ஆறுமுகம் | Occupation | : | சார்பு ஆய்வாளர் |
| Village | : | இராமநாதபுரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 21st day of July 2026.

**21.07.2026**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஏர்வாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏர்வாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.ஆறுமுக நயினார் என்பவரை எனக்கு தெரியும். அவரது கையொப்பம் எனக்கு ஆவணங்களின் அடிப்படையில் பரிச்சயம். இந்த வழக்கு சுமார் 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. எனவே இந்த வழக்கை விரைந்து முடிப்பதற்காக நீதிமன்றத்தின் அனுமதி பெற்று நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 04.01.2015ம் தேதி காலை 5.00 மணிக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகநயினார், தலைமை காவலர்கள் திரு.மாசிலாமணி, லோகநாதன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து பணிக்கு சென்றபோது 6925 என்ற எண் கொண்ட அரசு மதுபானகடை பாரின் முன்பு சாக்குப்பையுடன் நின்று கொண்டிருந்த, பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ஆஜர் எதிரியை விசாரணை செய்து, அவரிடமிருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அந்த சாக்குப்பையில் மதுபாட்டில்கள் இருந்துள்ளது. பின்னர் பாரின் உள்ளே சென்று சோதனை செய்து பார்த்தபோது அட்டைப்பெட்டி மற்றும் சாக்குப்பைகளில் 180 ml அளவுள்ள கோல்டன் வாட்ஸ் நம்பர் ஒன் பிராண்ட் 144 பாட்டில்கள், 180 ml அளவுள்ள கார்டினல் கிரேப் மதுபாட்டில்கள் 192, மொத்தம் 336 பாட்டில்கள் இருந்துள்ளது. அதனை எதிரி விற்பனைக்காக வைத்திருந்ததாக தெரியவந்துள்ளது. எனவே எதிரியை உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி கைது செய்து, சாட்சிகள் முன்னிலையில் மேற்படி மதுபாட்டில்களை அத்தாட்சி மூலமாக கைப்பற்றியுள்ளார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 2/2015 ல் இதச பிரிவு 188 மற்றும் த.ம.வி.ச பிரிவு 4(1)(aa) உ/இ பிரிவு 24–ன்கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1, 2யை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91ன் மூலமாக இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரியின் மீது இதச பிரிவு 188 மற்றும் த.ம.வி.ச பிரிவு 4(1)(aa) உ/இ பிரிவு 24–ன்கீழ் தண்டிக்கத்தக்க கு ற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான், நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பாரின் உரிமையாளர் யார் என்று விசாரித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பாரின் உரிமையாளரை இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்கள் எந்த கடையில் இருந்து வாங்கப்பட்டவை என்று ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மதுபானகடையின் விற்பனையாளர் அல்லது வேறு நபர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்ததாக சொல்லப்படும் சாக்குப்பையில் எத்தனை மதுபாட்டில்கள் இருந்தது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பாருக்குள் மொத்தம் எத்தனை அட்டைப்பெட்டிகள் இருந்தது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் பாருக்கு அருகில் ஜனநடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

சம்பவ இடத்தில் இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் நேரம் காலையா, மாலையா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் 4 வது காலத்தில் தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தேதியில், நேரத்தில் இடத்தில் ஆய்வு எதுவும் நடக்கவில்லை என்றும், எதிரியை கைது செய்யவில்லை, எதிரியிடமிருந்து சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையததில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் சாக்குப்பை மற்றும் அட்டைப்பெட்டிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை – இல்லை**

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.07.24 10:28:50 +0500